**நியதிகளும் நிபந்தனைகளும்**

பின்வரும் நியதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் கண்டிப்பாக இணங்கிஒழுகுவதற்கு நான் / நாங்கள் உடன்படுகின்றோம்.

1. என்னால் / எங்களால் பேணப்படும் ஏதேனும் கணக்கில் வரவு வைக்கப்படும் ஏதேனும் கடன் வருவாய்களைப் பயன்படுத்துவதன் மூலம் கீழே தரப்படும் நியதிகளையும் நிபந்தனைகளையும் நான் / நாங்கள் ஏற்றுக்கொள்வதுடன் அவற்றுக்கு இணங்கி ஒழுகுவேன் / ஒழுகுவோம் எனவும் நான் / நாங்கள் இத்தால் உடன்படுகின்றேன் / உடன்படுகின்றோம்.

2. நேஷன்ஸ் ட்ரஸ்ற் வங்கி PLC, அதன் தனிப்பட்டதும் முழுமையானதுமான தற்றுணிபின் பிரகாரம் எனக்கு / எங்களுக்கு எவ்வித முன்னறிவித்தலும் இன்றி காலத்துக்குக் காலம் ஏதேனும் கடன் வசதியை மீளாய்வு செய்வதற்கும் அதனை திரும்பப் பெறுவதற்கும் / இரத்துச் செய்வதற்கும் அல்லது அதனை மீள அழைப்பதற்கும் அல்லது எந்நேரத்திலும் அதனுடன் தொடர்பான நியதிகளையும் நிபந்தனைகளையும் மாற்றுவதற்கும் உரிமையைக் கொண்டிருத்தல் வேண்டும்.

3. நேஷன்ஸ் ட்ரஸ்ற் PLC யினால் நிர்ணயிக்கப்பட்டு உறுதிப்படுத்தல் கடிதம் ஒன்றில் எனக்கு / எங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்ட உறுதிப்படுத்தப்பட்ட வீதத்தில் கடன் நிதிகள் விடுவிக்கப்பட்டதன் மீதமைவாக வட்டி வீதம் மாதாந்தம் செலுத்தப்படுதல் வேண்டும். சொல்லப்பட்ட வட்டி வீதத்திற்கு நான் / நாங்கள் உடன்படவில்லையெனில், சொல்லப்பட்ட கடன் வருவாய்களை நான் / நாங்கள் பயன்படுத்தலாகாது எனவும் கடனை என்னால் / எங்களால் ஏற்றுக்கொள்ள இயலாமையை உடனடியாக நேஷன்ஸ் ட்ரஸ்ற் வங்கி PLC இற்கு எவ்வாறெனினும், அத்தகைய உறுதிப்படுத்தல் கிடைத்ததிலிருந்து 7 நாட்களினுள்) தெரிவித்தல் வேண்டும் எனவும் நான் / நாங்கள் ஏற்றுக்கொள்கின்றேன் / ஏற்றுக்கொள்கின்றோம். கடன் வருவாய்களைப் பயன்படுத்துதல் நேஷன்ஸ் ட்ரஸ்ற் வங்கி PLC யினால் அனுப்பிவைக்கப்பட்ட உறுதிப்படுத்தல் கடிதத்தில் தரப்பட்ட மாதாந்த தவணைக் கட்டணத் தொகை, வட்டி வீதம் மற்றும் மீள் செலுத்தல் காலப்பகுதி ஆகியவற்றை மாற்றுவதற்கான வங்கியின் உரிமைக்கு அமைவாகவும் அதற்குப் பங்கமின்றியும் அத்தகைய மாதாந்த தவணைக் கட்டணத் தொகை, வட்டி வீதம் மற்றும் மீள் செலுத்தல் காலப்பகுதி ஆகியவற்றை நான் / நாங்கள் ஏற்றுக்கொண்டேன் / ஏற்றுக்கொண்டோம் என்பதற்கான இறுதியான நிரூபணமாகும். சந்தை நிலைமைகள், மாதாந்த தவணைக் கட்டணத் தொகை மற்றும் மீள் செலுத்தல் காலப்பகுதி ஆகியவற்றைப் பொறுத்து நேஷன்ஸ் ட்ரஸ்ற் வங்கி PLC அதன் தற்றுணிபின் பிரகாரம் ஏற்புடைய வட்டி வீதத்தை அதிகரிக்கலாம் அல்லது குறைக்கலாம் என்பதற்கு குறிப்பாக உடன்பாடு தெரிவிக்கப்படுகின்றது. கடன் அத்துடன் / அல்லது கடன் மீதான வட்டியின் மீள் கொடுப்பனவில் தவணைக்கட்டணங்களின் மீள் கொடுப்பனவு என்னால் / எங்களால் உரிய திகதிகளில் செலுத்தப்படாவிட்டால், பொருந்திக்கொண்ட சேத ஈடுகளாக சாதாரணமாக ஏற்புடைய வீதத்தை விட அதிக வீதத்தில் வட்டியை விதிப்பதற்கு நேஷன்ஸ் ட்ரஸ்ற் வங்கி PLC உரித்துடையதாதல் வேண்டும். கடன் அல்லது ஏதேனும் செலுத்தப்பட்ட அல்லது செலுத்த வேண்டிய வட்டித் தொகை மீதான ஏதேனும் ஏற்புடைய வரி, என்னால் / எங்களால் செலுத்தப்படுதல் வேண்டும்.

4. நேஷன்ஸ் ட்ரஸ்ற் வங்கி PLC யில் என்னால் / எங்களால் பேணப்படும் ஏதேனும் நடைமுறைக் கணக்குகளில் அல்லது சேமிப்புக் கணக்குகளில் அல்லது நிலையான வைப்புக் கணக்குகளில் நேஷன்ஸ் ட்ரஸ்ற் வங்கி PLC யின் முழுமையான தற்றுணிபின் பிரகாரம், எனக்கு / எங்களுக்கு எவ்வித முன்னறிவித்தலும் இன்றி கடன் வசதியின் கீழ் அல்லது அது தொடர்பாக மேலே ஏற்றுக்கொள்ளப்பட்ட உரிய திகதிகளில் செலுத்த வேண்டிய எல்லாத் தொகைகளையும் செலுத்த வேண்டிய வட்டித் தொகையுடன் பற்று வைப்பதற்கு, மேலதிகப்பற்று ஒன்றை உருவாக்குவதற்கு அல்லது தற்போதுள்ள மேலதிகப்பற்று எல்லையை அதிகரிப்பதற்குக் கூட நான் / நாங்கள்

இத்தால் மாற்ற முடியாதவாறு நேஷன்ஸ் ட்ரஸ்ற் வங்கி PLC இற்கு அதிகாரம் அளிக்கின்றேன் / அதிகாரம் அளிக்கின்றோம்.

5. ஏதேனும் காரணத்தினால் என்னால் / எங்களால் விண்ணப்பிக்கப்பட்ட கடன் தொகையை விட குறைவான அல்லது அதிகமான தொகையை வழங்குவதற்கும் நான் / நாங்கள் நேஷன்ஸ் ட்ரஸ்ற் வங்கி PLC யை கேட்டுக்கொள்வதுடன் அந்தக் கடன்தொகையை ஏற்றுக்கொள்வதற்கும் உடன்படுகின்றேன் / உடன்படுகின்றோம். அத்தகையதொரு சந்தர்ப்பத்தில், என்னால் / எங்களால் விண்ணப்பிக்கப்பட்ட கடன் தொகையை விட குறைவான அல்லது அதிகமான கடன் தொகையும் என்னிடம் / எங்களிடம் எவ்வித கோரிக்கையை அல்லது அறிவித்தலை விடுப்பதற்கான தேவை இன்றி இதில் உள்ளடங்கியுள்ள நியதிகள் மற்றும் நிபந்தனைகளால் கட்டுப்படுத்தப்படுதல் வேண்டும்.

6. நிறுவனம் ஒன்றின் பங்காளர்களாக அல்லது வேறுவிதமாக இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட ஆட்களால் அல்லது அவர்கள் சார்பாக இந்த ஆவணம் ஒப்பமிடப்படின், மேலே சொல்லப்பட்ட கடன் மற்றும் வட்டித் தொகைக்காக அத்தகைய ஆள் இணைந்தும் தனித்தும் நேஷன்ஸ் ட்ரஸ்ற் வங்கி PLC இற்குப் பொறுப்புடையவராதல் வேண்டும் என்பதுடன் மேலே சொல்லப்பட்ட கடன் மற்றும் வட்டி தொடர்பாக பணம் செலுத்தவேண்டியிருக்கும் காலம் முழுவதும் தனிப்பட்ட அல்லது பிரதான கடனாளியாக அத்தகைய ஆள் ஒவ்வொருவரும் பொறுப்புடையவராதல் வேண்டும்.

7. எனக்கு / எங்களுக்கு எவ்வித முன்னறிவித்தலுமின்றி ஏதேனும் கடன் கணக்கை எனது / எங்களுடைய எல்லா அல்லது ஏனைய நடைமுறை, சேமிப்பு அல்லது வைப்பு (தவணை அல்லது கேள்வி) கணக்குகளுடன் இணைப்பதற்கும் நேஷன்ஸ் ட்ரஸ்ற் வங்கி PLC இல் உள்ள எனது / எங்களுடைய கணக்கில் இருக்கும் எல்லா அல்லது ஏதேனும் பணத்தை அல்லது கடமைப்பட்டுள்ள அல்லது செலுத்த வேண்டிய மீதியை அல்லது இதன் பின்னர் எனக்கு / எங்களுக்கு அல்லது தற்போது மீதியாக உள்ள அல்லது செலுத்த வேண்டிய ஏதேனும் அல்லது எல்லா பணங்களுக்கும் எதிராக இதன் பின்னர் நேஷன்ஸ் ட்ரஸ்ற் வங்கி PLC யினால் எங்களுக்கு செலுத்துவதற்கு கடமைப்பட்டுள்ள அல்லது செலுத்த வேண்டிய மீதியை அல்லது தனித்து அல்லது எவரேனும் அல்லது ஏதேனும் ஆளுடன் அல்லது கூட்டுத்தாபனத்துடன் இணைந்து எனது / எங்களுடைய தனிப்பட்ட இயலுமையில் / இயலுமைகளில் அல்லது வேறு ஏதேனும் இயலுமைகளில் எனக்கு / எங்களுக்கு வழங்கப்பட்ட அல்லது வழங்கப்படவுள்ள கடன்கள், வரவுகள், முற்பணங்கள் அல்லது ஏதேனும் பணவகை உதவி, சகாயம் அல்லது வங்கி வசதி மீது நேஷன்ஸ் ட்ரஸ்ற் வங்கி PLC இற்கு நான் / நாங்கள் கடன்படும் அல்லது செலுத்த வேண்டிய நிலுவையை சமப்படுத்துவதற்கு அல்லது ஒதுக்குவதற்கு நேஷன்ஸ் ட்ரஸ்ற் வங்கி PLC இற்கு இத்தால் என்னால் / எங்களால் அழிக்கமுடியாதவாறு அதிகாரம் அளிக்கப்படுகின்றது. நேஷன்ஸ் ட்ரஸ்ற் வங்கி PLC இற்கு என்னால் எங்கால் வழங்கப்பட்ட அத்தகைய பிணிப்பில்லா உரிமையும் அழிக்க முடியாத அதிகாரமும் அத்தகைய உரிமையை அல்லது அதிகாரத்தைப் பிரயோகிக்கும் திகதியில் அல்லது அதற்கு முன்னர் நேஷன்ஸ் ட்ரஸ்ற் வங்கி PLC யின் ஏதேனும் அலுவலகத்துக்கு எங்களால் வழங்கப்படும் கொடுப்பனவுக் காசோலைகள், கோரிக்கைகள், அல்லது பணம் திரும்பப் பெறுதல் அல்லது என்னால் / எங்களால் வரையப்பட்ட வேறு அவற்றை ஒத்த ஆவணங்களை மறுக்கும் அல்லது நிராகரிக்கும் அளவுக்குக் கூட அல்லது எனது / எங்களுடைய பெயரில் உள்ள கணக்கை மூடும் அளவுக்குக்கூட நேஷன்ஸ் ட்ரஸ்ற் வங்கி PLC யினால் பிரயோகிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன் நேஷன்ஸ் ட்ரஸ்ற் வங்கி PLC யின் அத்தகைய நடவடிக்கைகளின் விளைவாக நேஷன்ஸ் ட்ரஸ்ற் வங்கி PLC மீது விடுக்கப்படும் எல்லா கோரல்கள் அல்லது கோரிக்கைகளுக்கு எதிராகவும் நேஷன்ஸ் ட்ரஸ்ற் வங்கி PLC இற்கு நட்டோத்தரவாதம் அளிப்பதற்கும் நான் / நாங்கள் இத்தால் பொறுப்பேற்கின்றேன் / பொறுப்பேற்கின்றோம்.

8. மேலே சொல்லப்பட்ட கடன் மற்றும் அதன் மீதான வட்டி தொடர்பாக நேஷன்ஸ் ட்ரஸ்ற் வங்கி PLC இற்கு என்னால் / எங்களால் செலுத்த வேண்டிய பணம் கால விதிப்பு கட்டளைச் சட்டதினால்

(தலைப்பு 68) தடைபெறாது அறவிடக்கூடியதாதல் வேண்டும் என்பதுடன் சொல்லப்பட்ட பணத்தை அறவிடுவதற்கு எனக்கு / எங்களுக்கு எதிரான ஒரு தடையாக கால விதிப்பு கட்டளைச் சட்டதின் (தலைப்பு 68) பிரகாரம் வாதிடமாட்டேன் / வாதிடமாட்டோம்.

9. மேலே சொல்லப்பட்ட நியதிகளிலும் அல்லது நிபந்தனைகளிலும் எவற்றையேனும் நிபந்தனையின்றி அல்லது நியதிகளின் பிரகாரம் நேஷன்ஸ் ட்ரஸ்ற் வங்கி PLC விலக்களிக்கலாம். எனினும், அத்தகைய ஒவ்வொரு விலக்களிப்பும் நேஷன்ஸ் ட்ரஸ்ற் வங்கி PLC பொருத்தமானதெனக் கருதும்போதெல்லாம் அத்தகைய விலக்களிப்பு வழங்கப்படாததுபோன்று எப்போதும் பிரயோகிக்கத்தக்கதாக இருக்கும் நேஷன்ஸ் ட்ரஸ்ற் வங்கி PLC யின் உரிமைகளுக்குப் பங்கமில்லாதிருத்தல் வேண்டும்.

10. நான் / நாங்கள் தவணை தவறும் சந்தர்ப்பத்தில் நிலுவையாக உள்ள தொகைகளை அறவிடுவதற்காக நேஷன்ஸ் ட்ரஸ்ற் வங்கி PLC மூன்றாம் தரப்பு சேகரிப்பு முகவர்களை நியமிக்கலாம் என நான் / நாங்கள் ஏற்றுக்கொள்வதுடன் அத்தகைய சேகரிப்பின் எல்லாக் கிரயங்களையும் செலுத்துவதற்கு நான் / நாங்கள் ஏற்றுக்கொள்கின்றோம்.

11. காலத்துக்குக் காலம் நேஷன்ஸ் ட்ரஸ்ற் வங்கி PLC யின் முழுமையான தற்றுணிபின் பிரகாரம் தீர்மானிக்கப்படும் கட்டணம் ஒன்றைச் செலுத்தி முன்கூட்டிய தீர்ப்பனவு / பகுதியளவு தீர்ப்பனவு ஏற்றுக்கொள்ளப்படும்.

12. இந்தக் கடன் நான் / நாங்கள் வேறொரு நிதி நிறுவனத்திலிருந்து பெற்ற நிதி வசதியைத் தீர்ப்பதற்காக (முழுமையாக அல்லது பகுதியாக) என நான் / நாங்கள் குறிப்பிட்டிருப்பின், அத்தகைய நிறுவனத்திடமிருந்து கிடைக்கப்பெற்ற ஒரு உறுதிப்படுத்தலின் அடிப்படையில் நேஷன்ஸ் ட்ரஸ்ற் வங்கி PLC யின் முழுமையான தற்றுணிபின் பிரகாரம் என்னுடைய / எங்களுடைய கணக்கிலிருந்து பற்று வைத்து என்னுடைய / எங்களுடைய தற்போதைய பொறுப்பின் தீர்ப்பனவாக அத்தகைய நிறுவனத்துக்கு கொடுப்பனவை மேற்கொள்ளலாம். என்னுடைய / எங்களுடைய அறிவுறுத்தல்களைப் பின்பற்றி செயற்படுவதன் விளைவாக நேஷன்ஸ் ட்ரஸ்ற் வங்கி PLC இற்கு எழக்கூடிய ஏதேனும் கோரல்கள் அல்லது நட்டங்களிலிருந்து நேஷன்ஸ் ட்ரஸ்ற் வங்கி PLC இற்கு நட்டோத்தரவாதம் அளிப்பதற்கும் நட்டோத்தரவாதம் அளித்துப் பேணுவதற்கும் நான் / நாங்கள் இத்தால் உடன்படுகின்றோம்.

13. நேஷன்ஸ் ட்ரஸ்ற் வங்கி PLC அதன் முழுமையான தற்றுணிபின் பிரகாரம் பொருத்தமானதெனக் கருதும் அத்தகைய நோக்கத்துக்காக என்னைப்பற்றிய / எங்களைப்பற்றிய அத்துடன் / அல்லது எனது / எங்களுடைய கொடுக்கல் வாங்கல்கள் அல்லது கணக்கு(கள்) பற்றிய தகவல்களை நேஷன்ஸ் ட்ரஸ்ற் வங்கி PLC யின் ஏதேனும் கிளைக்கு வெளியிடுவதற்கு நான் / நாங்கள் இத்தால் நேஷன்ஸ் ட்ரஸ்ற் வங்கி PLC இற்கு அதிகாரம் அளித்து சம்மதத்தைத் தெரிவிக்கின்றேன் / தெரிவிக்கின்றோம்.

14. நான் / நாங்கள் இதில் ஒப்பமிடுவதற்கு முன்னர் இந்த நியதிகளும் நிபந்தனைகளும் எனக்கு / எங்களுக்கு வழங்கப்பட்டு விளக்கப்பட்டது எனவும் சொல்லப்பட்ட நியதிகளையும் நிபந்தனைகளையும் நான் / நாங்கள் வாசித்து, விளங்கிக்கொண்டேன் / விளங்கிக்கொண்டோம் எனவும் நான் / நாங்கள் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன் / உறுதிப்படுத்துகின்றோம்.

நேஷன்ஸ் ட்ரஸ்ற் வங்கி PLC யின் தனிப்பட்ட கடன்களுக்கான நியதிகளினதும் நிபந்தனைகளினதும் பிரதிகள் அத்தகைய உற்பத்திக்கு ஏற்புடைய விபரங்களுடன் இதில்

ஒப்பமிடுவதற்கு முன்னர் நான் / நாங்கள் தெரிவு செய்த மொழியில் வழங்கப்பட்டு விளக்கப்பட்டன எனவும் சொல்லப்பட்ட விபரங்களையும் நியதிகளையும் நிபந்தனைகளையும் நான் / நாங்கள் வாசித்து விளங்கிக்கொண்டேன் / விளங்கிக்கொண்டோம் எனவும் அதன் பிரகாரம் கட்டுப்படுவதற்கு உடன்பட்டு சம்மதிக்கின்றேன் / சம்மதிக்கின்றோம் எனவும் நான் / நாங்கள் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன் / உறுதிப்படுத்துகின்றோம்.

| ........................... | ............ | ........................... | ............ |
|---|---|---|---|
| பிரதான விண்ணப்பதாரியின் ஒப்பம் | திகதி | இணை விண்ணப்பதாரியின் ஒப்பம் | திகதி |

**சாட்சிகள்**

| | | | |
|---|---|---|---|
| ஒப்பம் | : | ஒப்பம் | : |
| பெயர் | : | பெயர் | : |
| முகவரி | : | முகவரி | : |
| தே.அ.அ. இல. | : | தே.அ.அ. இல. | : |